BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# மே 29 முதல் ஜூன் 4 வரை மாற்றுத்திறனாளிகளுக்கான விளையட்டுக்களை நக்ர நிர்வாகம் அங்கீகரிக்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (மே 17, 2022) – ப்ராம்ப்ட்டன் நகர பொழுதுபோக்கு பிரிவானது, நகரின் மாற்றுத்திறனாளிகளுக்கான அணியுடன் கூட்டு சேர்ந்து ப்ராம்ப்ட்டன் நகரில் மாற்றுத்திறனாளி விளையாட்டுக்களுக்கான வாரத்தை மே 29 முதல் ஜூன் 4 வரை உபசரிக்கும்; இது தேசிய மாற்றுத்திறனாளிகளுக்கான வாரம் அனுசரிப்பதுடன் இணைந்து நடக்கும்.

ப்ராம்ப்ட்டனில் நடக்க உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு வாரமானது, தழுவிக் கொள்ளப்பட்ட விளையாட்டுகள் மற்றும் நகர வசதிகள், திட்டங்கள் மற்றும் சேவைகளில் பலவற்றையும் எடுத்துக் காட்டும். ஆண்டு முழுவதும் நிலவுகின்ற பங்கேற்பதற்கான தடைகளை அகற்றவும், அனைத்து குடியிருப்பாளர்களும் பரந்த அளவிலான விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி நிகழ்ச்சிகள் உட்பட பொழுதுபோக்கு சேவைகளை அணுகுவதை உறுதி செய்யவும் நகர நிர்வாகம் முயற்சிக்கிறது.

சக்கர நாற்காலி கூடைப்பந்து, உட்கார்ந்த நிலையில் ஆடும் கைப்பந்து, ஸ்லெட்ஜ் ஹாக்கி மற்றும் பலவற்றை உள்ளடக்கிய, வாரம் முழுவதும் பலவிதமான முயன்று பாருங்கள் எனும் வகையிலான விளையாட்டுகள் நிகழ்வுகளில் அடங்கும். ஜூன் 4, சனிக்கிழமை அன்று மதியம் 1 மணி முதல் 5 மணி வரை சேவ் மேக்ஸ் ஸ்போர்ட்ஸ் மையத்தில் மாற்றுத்திறன் கண்காட்சி மற்றும் மல்டி-ஸ்போர்ட் ஷோகேஸ் ஆகியவை நடைபெறும். பதிவு செய்யத் தேவையில்லை. அனைத்து நிகழ்வுகளும் இலவசம், போகிற போக்கில் கலந்துகொள்ளும்  திட்டங்களாகும்.

ஜூன் 3, வெள்ளிக்கிழமை அன்று லோஃபர்ஸ் லேக் ரிக்ரியேஷன் சென்டரில் மாலை 6:30 முதல் 10:30 மணி வரை தேசிய மாற்றுத்திறன் வாரத்தைக் கொண்டாடும் விதமாக இரவு உணவு மற்றும் நடனம் ஆகியவை நடைபெறும். பதிவு செய்வது தேவை.

மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு வாரத்தின் நிகழ்ச்சிகள் பற்றி மேலும் அறிய இங்கு க்ளிக் செய்யவும்.

**பல்லாண்டு மாற்றுத்திறன் திட்டம் பற்றிய உங்கள் பின்னூட்டக்கருத்துக்களை வழங்குங்கள்**

2022 லிருந்து 2026 வரைக்குமான ப்ராம்ப்ட்டன் நகரின் பல்லாண்டு மாற்றுத்திறன் திட்டம் (MAP) என்பது மாற்றுத்திறனாளிகளுக்கான தடைகளை குறைக்க, அகற்ற மற்றும் நீக்குவதற்கான திட்டமாகும்; இது நமது திட்டங்கள், சேவைகள் மற்றும் வசதிகளைமேம்படுத்தவும் செய்கிறது.

வணிகங்களை ஈடுபடுத்துவதற்கும், எங்கள் அடித்தளத்தை வலுப்படுத்துவதற்கும், கலாச்சார மாற்றத்தை முன்னெடுப்பதற்கும் நாங்கள் எடுக்கும் நடவடிக்கைகளை MAP கோடிட்டுக் காட்டுகிறது; இது ப்ராம்ப்ட்டனின் அனைத்து குடிமக்களும் வேலை பார்ப்பது உட்பட அன்றாட நடவடிக்கைகளில் பங்கேற்க அனுமதிக்கும்; பொது போக்குவரத்தை எடுத்துக்கொள்ளும்; ஆன்லைன் சேவைகளைப் பயன்படுத்தும்; விளையாட்டு மற்றும் கலாச்சார நிகழ்வுகளில் கலந்துகொள்ளும்; மற்றும் பொழுதுபோக்கு வசதிகள், பூங்காக்கள் மற்றும் பிற பொது இடங்களை அனுபவிக்கவும் அனுமதிக்கும்.

MAP யின் திட்ட வரைவு பற்றிய பின்னூட்டக்கருத்துக்களை நகர நிர்வாகம் நாடுகிறது. சிறியதொரு கருத்தாய்வில் உங்கள் எண்ணங்களைப் பகிர்வதற்கு, இங்கு க்ளிக் செய்யவும்.

**அறிஞர் கூற்றுக்கள்**

“மே 29 முதல் ஜூன் 4 வரை பிராம்ப்டனில் தேசிய மாற்றுத்தினாளிகளுக்கான வாரம் மற்றும் அவர்களுக்கான விளையாட்டு வாரத்தை அங்கீகரிப்பதில் எங்களுடன் சேருமாறு அனைவரையும் ஊக்குவிக்கிறேன். ப்ராம்ப்ட்டன் ஒரு ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான நகரமாகும், அங்கு அனைத்து குடியிருப்பாளர்களும் தங்கள் நல்வாழ்வுக்காக பொழுதுபோக்கு சேவைகளை அணுகலாம்.”

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“2022 முதல் 2026 வரையிலான நகரத்தின் பல்லாண்டு மாற்றுத்திறன் திட்டமானது, மற்றுத்திறனாளிகளின் விளையாட்டுக்கான வாரம், மற்றும் ப்ராம்ப்ட்டனில் உள்ள சேவைகள் மற்றும் வசதிகள் போன்ற எங்கள் திட்டங்கள் மற்றும் முயற்சிகளுக்கான அணுகலை ஆதரிக்கும். வரைவுத் திட்டம் குறித்த உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள நேரம் ஒதுக்குங்கள், இது எங்கள் நகரத்தை மேம்படுத்த உதவும் - அனைவருக்குமே."

- *ரொவீனா சான் ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர்,, வார்டுகள் 1 & 5; தலைவர், சமுதாய சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“இந்த மாற்றுத்தினாளிகளுக்கான விளையாட்டு வாரத்தில், ப்ராம்ப்டன்வாசிகள் தங்கள் தேவைகளுக்காக பரந்த அளவிலான விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி நிகழ்ச்சிகளுக்காக பதிவு செய்யலாம். அனைவரும் ஆரோக்கியமாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்க, தழுவிக் கொண்டபடியான விளையாட்டுகளை நடத்துவதன் மூலம் மாற்றுத்தினாளிகள் பங்கேற்பதற்கான தடைகளை நீக்கி வருகிறோம்.

- *பேட் ஃபோர்ட்டினி, பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 7 & 8, மாற்றுத்திறனாளிகளுக்கான அலோசனைக்குழு உறுப்பினர், ப்ராம்ப்ட்டன் நகரம், பீல் பிராந்திய மாற்றுத்திறனாளிகளுக்கான ஆலோசனைக்குழு*

“நகர ஊழியர்கள் அனைவரையும் உள்ளடக்கிய பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை வழங்குவதற்கு தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ளனர். நிகழ்வுகளில் கலந்துகொள்வதன் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு வாரத்தைக் கொண்டாடுங்கள், மேலும் ப்ராம்ப்ட்டனின் புதிய பல்லாண்டு மாற்றுத்திறனாளிகளுக்கான திட்டம் குறித்த உங்கள் கருத்தை தெரிவியுங்கள்.”

- *பால் மோர்ரிஸன், இடைக்கால தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca